REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 109

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

THE "NAM NADU" A TAMIL DAILY. THE OFFICIAL ORGAN OF THE D.P.F.

சந்தா விகிதம்:
1 வருடம் ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
[illegible]

சென்னை: ஐப்பசி 3உ திங்கள் (19—10—53) ★ ★ ★ வெளியீடு: ஐப்பசி 4உ செவ்வாய் (20—10—53)

தைமூர், கோரி, கஜினிக்கு 'ஜய ஜய' பாடிய ஜவகரின் மூதாதையர்!

ஆங்கிலேயருக்கு ஆரம்பத்தில் இடங்கொடுத்தவர் தமிழர் என்று ஏசும் நேருவின் இழி குணம்!

தென்னாட்டு ஐதர் அலியின் தாக்குதலால் சிதறியோடிய ஆங்கிலேயர் வரலாற்றை பிரதமர் அறியாரா?

பண்டிதரை மூடிக்கிடந்த புகழ் மேகத்தை விரட்டிய நாள் அக்டோபர் 2

நேருவுக்கு தி. மு. கழகம் அளித்த கருப்புக் கொடி உபசாரம் குறித்து மலையாள வார இதழான 'சோஷலிஸ்ட்' தரும் விளக்கம்

"காங்கிரசினுடையவும், நேருவினுடையவும் வரலாற்றில், அக்டோபர் 2-ந் தேதி மறக்க முடியாத தினம்—காந்தியாரின் பிறந்த தினம் என்பதாலல்ல—நேருவின் பிரசாரகர்கள், அவர்மேல் அணிவித்திருந்த ஆராதனையின் திரை, கிழித்தெறியப்பட்ட தினம், அக்டோபர் 2!"

"திராவிட முன்னேற்றக் கழகத்தவரோடு அரசியல் வேற்றுமை கொண்டோர்கூட, அவர்களது இந்த இயக்கத்தை மனம் மகிழ்ந்து வாழ்த்துவர். தென்னாடு பற்றி அலட்சியத்தோடும், அவமதிப்போடும் மட்டுமே பேசும் மத்திய பீட அமைச்சர்களின் பண்பாட்டிற்கு எல்லை போட வேண்டிய அவசியம் எப்போதோ ஏற்பட்டுவிட்டது."

"காந்திக் குல்லாய், அசோகச் சக்கரம், இந்தி முணு முணுப்பு இவையோடு வரும் வடக்கத்தியர்களை, எஜமானர்களாக, கோவம் எண்ணவில்லை தமிழக மக்களும் இதையே செய்தனர். அவர்களுக்கு நமது நல்லாசிகள்!"

"1747-ல், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், முதன் முதலில், சென்னையில்தான் காலூன்றியதென்று நேரு பேசினார். என்ன பொருள் இதற்கு? இதை எடுத்துக்காட்ட நிகழ்ந்த தேவை என்ன? நாட்டுப்பற்றற்ற சென்னை மக்கள், பிறருக்கு அடிபணிந்தனரென்றும், ஆகவே, இந்தியா முழுதும் ஆங்கிலேயருக்கு அடிமையானதென்றும், பின்னர், வடக்கத்தி யோக்கியர்கள் பலர், இழந்த விடுதலையை மீட்டுக் கொடுத்தார்கள் என்பதையும் விளக்கவே இந்த சூட்சமமான பேச்சு. அவசியமற்ற, ஆட்சேபிக்கத்தக்க இந்தப் பேச்சு ஒன்றே போதும், பண்டிதர் பிடுங்கியெறிய முயலும் கொழுகொம்பின் உயரத்தை அளக்க!"

"எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னர் தைமூர், கோரி கஜினி போன்றோருக்குத் தலைதாழ்ந்து, 'ஜய ஜய' பாடிய தனது வடக்கத்திய மூதாதையர்களின் கதையை, நேரு, ஏனோ மறந்துவிட்டார். மைசூர் சிங்கமான ஹைதர் அலியின் முன் பயந்தோடிய ஆங்கில சேனையின் படுதோல்வி குறித்து எட்மண்ட்பர்க் கூட உணர்ச்சி மிக்க பாடல் இயற்றியுள்ளார். தென்னாட்டின் வெற்றிக் கொடியை நினைத்துப் பார்க்க, சரித அறிஞரான நேரு, தவறிவிட்டார்; தவறிவிட்டார்!"

சென்னை வந்த பண்டித நேருவுக்கு, தி. மு. கழகத்தினர், பிரம்மாண்டமான கருப்புக்கொடி எதிர்ப்பைக் காட்டினர். ஆயிரக்கணக்கான தொண்டர்கள், காங்கிரஸின் ஆபத்த படையினரின் கோட்டையை குலைத்துக்கொண்டு அருகே சென்றதும், வண்டியை வேகமாகச் செலுத்தி, காரோட்டி, பிரதமரை பாதுகாத்தாராம்! போலீஸ், சிலரைக் கைது செய்தது.

ஆசிய மாணிக்கம், உலக மைந்தர்—இந்தியர்களின் கண்ணின் மணி போன்றவர் என்றெல்லாம் பேசப்படும், புகழப்படும் பண்டிதநேரு, அவரது வாழ்வில் முதன் முதலாக, மக்கள் சக்தி காட்டிய தன்மான சுவை கண்டார்! வீரரான நேரு, முதன் முதலாக, எதிர்ப்பு அணிவகுப்பின் முன்னிருந்து புறமுதுகிட்டார்.

* * *

சிற்சிலகாலமாக நேரு 'அதிகப்பிரசங்கி' வேடம் பூண்டு உலவுகிறார். செல்லுமிடமெங்கும் குழுமியிருக்கும் மக்கள் திரளும், உலக அரசியலில் தன் பெயர் அடிக்கடி எதிரொலி செய்வதும் நேருவை அகம்பாவியாக்கியுள்ளது. எந்த நிலையிலும், பொறுப்பு மிக்க தலைவர்களுக்கு ஏற்காத பலவற்றை, அவர், பேசி வருகிறார்.

சீராமுலு ஆந்திர பூமிக்காக விரதமேற்றுக் கொண்ட போது, அதற்கு 'நான் சென்ஸ்' எனப் பெயரிட்டார்!

விசால ஆந்திரத்திற்கான சீதாராமின் முயற்சி—காஷ்

(3-ம் பக்கம் பார்க்க)

தி. க.—தி. மு. க. அடிப்படை குறித்து பெரியார்

ஆத்தூர் தி. க. மாநாட்டில் தந்த விளக்கம்

"........இத்தகு சூழ்நிலையில், திராவிடர் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் ஒற்றுமையை ஏற்படுத்த, நமக்குள்ளாகச் சிலர் ஏன் நினைக்கிறார்கள் என்பது எனக்கு விளங்கவில்லை."

"இரண்டு கழகங்களுக்கும், அடிப்படையிலேயே வேற்றுமை உண்டு."

—பெரியார் ஈ. வெ. ரா,
('இந்து' 14—10—53)

* * * * * * * * * * * *

திராவிட கலாச்சாரம்

"சர்வ வியாபகமான மதம், ஒரு செயற்கை வஸ்துவல்ல. கலையிலும் அவ்விதம் பல அம்சங்களையும் ஒன்றாக இணைக்கலாமாயினும், எந்தப் பிரதேசத்தில் இந்த ஞாபகார்த்தம் கட்டுகிறோமோ, அதற்கேற்ற கலையழகு கொண்டதாக அது இருக்க வேண்டுமென்று கருதப்பட்டது. அதனால்தான் திராவிட கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் கட்டிடமாக அமைக்க முடிவாகியிருக்கிறது."

—இன்டி, காந்தியார் நினைவு வழிபாட்டு மண்டப கல் நாட்டு விழாவில் ஆச்சாரியார்.
'சு. மி.': 17-10-53.

* * * * * * * * * * * *

வேட்டிகளை அதிகம் உற்பத்தி செய்வோருக்கு.....

சர்க்கார் வரி விதிக்கலாம்

புதுடெல்லி, அக். 18—

60 சத விகிதத்திற்கு மேல் வேட்டிகளைத் தயாரிக்கக் கூடாதென்ற கட்டுப்பாட்டுக்கு அதிகமாக, சில அனி மில்கள் வேட்டிகளைத் தயாரித்து வருவதாகத் தெரிவதாகவும், அதிகப்படி வேட்டி உற்பத்திக்கு உள்நாட்டு வரி விதிக்க சர்க்கார் உத்தேசித்திருப்பதாகவும் தெரிகிறது. இந்த முடிவு சீக்ரமே அமுலுக்கு வர இருப்பதால் இந்திய சர்க்கார் அவசரப் பிரகடனம் செய்யலாம்.

வட நாட்டு, நான்கு மாநிலங்களுக்கு யூனியன் சர்க்காரின் ரூ. 10 கோடி தானம்!

வளரும் வடக்கு; தேயும் தெற்கு!

"டில்லி ஞாபகார்த்தம் மிகப் பிரமாதமாக இருக்கும்; அங்கு, அவர்களுக்கு பொருள் முதலிய சாதனங்களுக்கு எல்லை இல்லை இந்தப் பிரதேசம் ஏழ்மையானது; மக்கள் ஏழ்மையானவர்கள்; சர்க்காரும் அதைவிட ஏழ்மையானது."

—இன்டி, காந்தியார் நினைவு வழிபாட்டு மண்டப கல் நாட்டு விழாவில் ஆச்சாரியார்.
'சு. மி.': 17-10-53.

1962 ஏப்ரலில் உலக யுத்தம் ஆரம்பமாகும் என்றும், சீனா, ஹாலந்து கனடா, நியூஜிலந்து ஆகியவைகள் இதனால் மிகவும் பாதிக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

அவைகளையும் மற்ற மாநிலங்களோடு சமமாக்கவே இந்த ஏற்பாடாம்!

நியூடெல்லி, அக். 18—

இந்திய யூனியனில் உள்ள மற்ற மாநிலங்களில் ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் முன்னேற்றத்தை, ஒன்றிரண்டு ஆண்டுகளுக்குள் எட்டிப்பிடிக்க சவுராஷ்டிரம், மத்திய பாரத், ராஜஸ்தான், பெப்சு ஆகிய நான்கு மாநிலங்களுக்கு ரூபாய் 10 கோடியை தானமாகக் கொடுக்க வேண்டுமென்று, அதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு ஏகமித்த முடிவிற்கு வந்திருக்கிறது.

இதே பணிக்காக, ஏற்கனவே மத்திய சர்க்கார், இந்த நான்கு மாநிலங்களுக்கும் எவ்வளவு தொகை உதவியுள்ளது என்பது விளங்கவில்லை.

இதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் தலைவர், முன்னாள் யூனியன் சர்க்காரில் சுரங்க மந்திரியாக இருந்த என். வி. காட்கில் ஆவார். ரூபாய் 10 கோடி தர வேண்டும் என்ற சிபாரிசை, குழு ஏகமனதாகக் குறிப்பிட்டிருக்கிறது.

திருப்பூர்

15—10—53-ல், 13, 14-வது வார்டு தி. மு. கழகச் செயற்குழு கூட்டம் தோழர் கே. பழனிசாமி தலைமையில் நடைபெற்றது. அப்போது பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஜவர் சிறையில்!

இன்று 49-வது நாள்

★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை : 19—10—1953 திங்கள்

சி. ஆர். மலானிசம்!

[4]

கனம் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், தமக்குள்ள 'ஜாதி உணர்வை,' அவர் தம் வாய்மூலமாகவே ஒப்புக்கொண்டு இருக்கிறார். அவராலேயே சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள 'சிறந்தவர்கள்' என்று கருதப்படுகிறவர்கள்' பட்டியலிலே, ஆச்சாரியாரையும் ஒருவராக குறிப்பிடுவதற்கு, அவர் கோபப்படமாட்டார் என்றே நாம் நம்புகிறோம். அந்தச் 'சிறந்தவர்கள் இந்த ஜாதி விஷயத்தில் தவறு செய்து கொண்டு' இருக்கிறார்கள் என்பதை வெளிப்படையாகவே, ஆச்சாரியார் சுட்டிக் காட்டி இருக்கிறார்.

ஆச்சாரியார் குறிப்பிடும் 'சிறந்தவர்கள்' பட்டியலைச் சேர்ந்த மற்ற சில பல 'சிறந்தவர்கள், இந்த ஜாதி விஷயத்தில் 'செய்த', செய்து கொண்டிருக்கிற' தவறின் காரணமாகத்தான், மற்ற 'ஜாதியினர்' தவறு செய்வதற்கு வாய்ப்பு கிடைத்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். 'சிறந்தவர்கள்' மேற்கொண்ட பதுமையான வாழ்க்கையின் காரணமாகத்தான், மற்ற 'சிறப்பற்றவர்'களிடையேயும், அந்தப் பதுமையான வாழ்க்கையைத் தாமும் பெறவேண்டும் என்ற நினைப்புப் பிறந்தது. அதற்கான முயற்சியும் எழுந்தது என்பதும் உண்மையிலும் உண்மையாகும். உண்மை, உடுக்கல் செல்லை, குடியிருத்தல் ஆகிய எல்லா நடைமுறைகளிலும் ஆச்சாரியார் பெருமையாகக் கூறிய அச் 'சிறந்தவர்க'ளையே முன்மாதிரியாகக் கொள்ள மற்றவர் முன்வந்தனர்.

ஆச்சாரியார் குறிப்பிடும் 'சிறந்தவர்க'ளை போன்றே, சிலரை, அந்தக் காலத்தில் 'சிறந்தவர்கள்' என்று ஆரிய வேத ஸ்மிருதிகளும் எழுதிருக்கிறது. ஆனால், அதற்காகக் காட்டப்பட்டுள்ள காரணங்களை வேறு. அந்தப் பண்பு அந்தக் காலத்தில் 'சிறந்தவர்கள்' என்று குறிப்பிடப்பட்டவர்களிடத்திலும் காணப்படவில்லை. அதே போல, இந்தக் காலத்திலும் 'சிறந்தவர்கள்' என்று ஆச்சாரியாரால் சிறப்பிக்கப்பட்டவர்களிடமும் காணப்படவில்லை.

எது எப்படி இருந்தாலும் வேதச் சட்டங்களைப்படி ஆச்சாரியார் கூறும் 'சிறந்தவர்கள்' இந்தக் காலத்திலும் நடந்து கொண்டிருக்கவில்லை. மற்றவர்களும் அந்தக் காலத்து நடைமுறையை விட்டு விலகாமல் இருந்திருப்பார்கள் என்பது நிச்சயத்திலும் நிச்சயம். ஆனால், நடைமுறையில் நாம் காணும் நிலைமை நேர்மாறாக இருக்கிறது.

இந்த வாழ்க்கைப் பந்தயப் போட்டியில், 'சிறந்தவர்'களும் போட்டியிடுகிறார்கள். ஆச்சாரியார் கூறுவதுபடி, 'சிறப்பில்லாதவர்களுடன் போட்டியிடுகிறார்கள்' இதில் எவருடைய போக்கைக் குற்றம் சொல்லுவது; எவருடைய போக்கு அறநெறியில் இருந்து விலகி இருப்பது என்பதைத்தான் நாம நிர்ணயிக்க வேண்டும்.

சாதகர் உத்தியோகங்களோ, கல்வி பெறும் வாய்ப்புகளோ, தொழில் அறிவு பெறும் சந்தர்ப்பங்களோ, ஆச்சாரியார் கூறும் 'சிறந்தவர்களி'ன் பிறந்த அகமாகவே இருக்க வேண்டும் என்பதை, ஆங்கில கற்றதனுல் உருவெடுத்துள்ள நியாய புத்தி கொண்ட எவனும் நியாயமானது என்று ஒப்புக் கொள்ளமாட்டான். அப்படி ஒப்புக்கொள்ளுகிறவன் உள்ளம் மனித உள்ளமாக இருக்க இருக்காலும் முடியவே முடியாது.

'சிறந்தவர்'களுக்குப் போட்டியாக, மற்றச் 'சிறப்புற்றவர்'களில நான்கு மருத்துவர், நான்கு பொறி இயல் நிபுணர், நான்கு பேராசிரியர், நான்கு பட்டம் பெற்றவர், நான்கு குமாஸ்தா, கட்டாயம் இருக்க வேண்டும் என்று நினைப்பதும், நினைத்ததை நிறைவேற்ற முயற்சிப்பதும், மனித உணர்ச்சிக்கு, சமத்துவத்திற்கு, நியாயத்திற்கு, வேறு எந்த அறநெறிக்கும் மாறானதும் அல்ல — முரண்பட்டதும் அல்ல இந்த முயற்சிக்குப் பெயர்தான் 'வகுப்பு நீதி' கோட்டல் என்பதாகும். இதிலே குற்றம் காண்பது கூடாது—அடாது!

இந்த உரிமை வேட்கையைத்தான், 'சிறந்தவர்கள்' எதிர்த்தார்கள், தூற்றினார்கள், துவேஷம் என்று பழி சாற்றினார்கள், 'வகுப்புத் துவேஷம்' என்ற பயங்கரப் பெயரையும் சூட்டினர்கள்.

ஆங்கிலேயர்கள், காங்கிரசின் அரசியல் விடுதலைக் கிளர்ச்சியைக் கண்டு, 'ராஜத்துரோகம்' என்றார்கள். கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களை 'ராஜத்துரோகிகள்' என்றார்கள்.

அதிகாரம், அந்தஸ்து, சுரண்டல், அவ்வளவும், தங்கள் கையிலேயே இருக்கவேண்டும் என்ற ஆங்கிலேயர்களின் பேராசையே இதற்குக் காரணம் என்ற உண்மையை அனைவரும் அறிவர். புனிதமான நாட்டு விடுதலை இயக்கத்தையும், இயக்க வீரர்களையும், ஆங்கிலேயர், அதிகாரம் தங்கள் பிடியில சிக்கிக் கிடக்கின்ற காரணத்தால், ஒடுக்கினர், கொடுமைப்படுத்தினர்! ஆரம்ப வெற்றி ஆங்கிலேயர்களுக்கு; இறுதி வெற்றி விடுதலைப் படையினருக்கு!

இஃதேபோல், அதிகாரம், அந்தஸ்து, பளபளப்பான வாழ்க்கை, ஆரம்பத்திலே பெற்றிருந்த, ஆச்சாரியார் குறிப்பிடும் 'சிறந்தவர்களா'ல், அதே அந்தஸ்து, அதிகாரம், வாழ்வு, வேண்டுமென்ற விழைவையும், அது கொண்டோரையும், 'வகுப்பு வாதம்,' 'வகுப்புத் துவேஷம்,' 'வகுப்புத் துவேஷிகள்' என்று தூற்றினர்; உரிமைக் கிளர்ச்சியை ஒடுக்கினர். ஆரம்பத்தில் வெற்றி 'சிறந்தவர்களு'க்குக் கிடைக்கத்தான் செய்தன; ஆனால் இறுதி வெற்றியோ மற்ற எல்லா 'சிறப்பற்றவர்'களுக்குக் கிடைத்திருக்கிறது!

வெள்ளை ஏகாதிபத்தியத்தை ஒழிக்க முயன்றதும், நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காகத்தான். 'சிறந்தவர்'களின் 'ஏகபோக உரிமை'யாக இருந்த, அந்தஸ்து, அதிகாரம், வாழ்வு, அனைத்தையும் அனைவருக்கும் பொதுவாக்க— ஒவ்வொருவருக்கும் உரிமையாக்கத்தான்!

அரசியல் விடுதலைக் கிளர்ச்சியை, ஆங்கிலேயன் நாடாள நம்மவர்க்கு 'தகுதி—திறமை' கிடையாது என்று ஆணவத்தோடு கூறி மகிழ்ந்தான். அதே போல் 'சிறந்தவர்கள்' தாங்கள் நீங்கலாக மற்றவர்களுக்கு 'தகுதி—திறமை' கிடையாது என்று பிடிவாதம் புரிந்துவந்தனர். நாட்டு நடைமுறை இரண்டு வாதத்தையும், தகர்த்துத் தூளாக்கி இருக்கிறது.

இரண்டும் உரிமை வேட்கைதான், சுதந்திரக் கிளர்ச்சியின் இரு முனைகள் இரண்டு—அவ்வளவுதான்.

இது பழங்கதை! உயிரற்றுப் போனது, காலத்தால்! உதறித் தள்ள வேண்டியது! நிற்க,

தென் ஆப்ரிக்காவில் வெள்ளை நிற வெறியின் மலான் நிறவெறி பேசுகிறான். ஆளப் பிறந்தது வெள்ளை இனமே தான் என்று கொட்டம் ஆடுகிறான். 'இந்தியர்'களை அவன் ஒதுக்குகிறான், சரி சமத்துவமாக அதிகாரத்தைப் பகிர்ந்துகொள்ள மறுக்கிறான். வெள்ளை நிறத்தவருக்கே, 'தகுதி-திறமை' உண்டென்று வாதிடுகிறான்.

இந்த அக்ரமத்தை எதிர்த்து, இந்தியர் அறப்போர் தொடுத்துள்ளனர். மனித குல விடுதலைப் போராட்டத்தில், இந்தியர் சமத்துவப் போராட்டமும் ஒரு உறுப்பு ஆகிறது. இதைப் பாராட்டுகிறோம்! போற்றுகிறோம்! அறப் போராட்ட வீரர்களைப் புகழ்ந்தேத்துகிறோம்!

இந்த நேர்மையுள்ளம், நியாயபுத்தி, அறநெறியைக் கைக்கொள்ளும் இதயத் துடிப்பு, இந்த நாட்டில் வளர்ந்து எழும் பெரும்பாலான மக்களின் சமத்துவப் போராட்டத்தை ஆதரிக்க செய்வதற்கான முறையில் ஏனோ இயங்க மறுக்கிறது! ஆதரிக்க வேண்டியதில்லை ஆதரவு செய்வதற்குப் பதில் அறப்போராட்டத்தை, இழிவுபடுத்தவும், அறப்போர் வீரர்கள் மீது மாசு கற்பிக்கவும், அடக்குமுறை கொண்டு ஒடுக்க தூபமிடவும், அந்த உயர்ந்த 'பண்புள்ளம்' கொண்டவர்கள் முன்வருகிறார்கள். தீவிரம் காட்டுகிறார்கள்.

இந்தப் போக்கு இரட்டை நாக்குப் போக்கு! 'நம்மவர்' என்ற உணர்ச்சிதான் இவர்கள் செயலில் இருக்கிறதேயல்லாது, நியாயம், அறநெறி, மனிதப் பொதுமை உணர்ச்சி, இந்த இரு வகையிலும் மருந்துக்குக் கிடையாது என்பது விளக்கம்.

இந்தப் போக்குத் தொலைந்தாக வேண்டும். இந்த மனப்போக்கு மாற்றப்பட்டாலன்றி, நமக்கு நல்லதோர் எதிர்காலம் கிடைப்பதே கிடையாது. இதை உணர வேண்டும் —ஆச்சாரியார் அல்ல—நாட்டு மக்கள்!

இவ்வளவும், ஆச்சாரியாருக்குத் தெரியும் விளக்கமாக!

ஆச்சாரியார் சொல்லுகிறார், 'பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவினாலொழிய முன்னேற முடியாது' என்று. 'சிறந்தவர்கள்' பதவியிலே இருப்பர், பட்டம் பெறுவர் நீதிமன்றங்களிலே நீதிபதி இருப்பர், செல்வாக்கு இருப்பிடங்களிலே அமர்ந்திருப்பர்; இவைகண்டு மற்றவர் முணுமுணுக்கக் கூடாது, எதிர்த்து ஒரு சொல் சொல்லக் கூடாது; கிளர்ச்சி எதுவும் செய்யக்கூடாது. நாடு முன்னேற வேண்டுமானால், 'பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவ' வேண்டும். இதைத்தான். 'ஒவ்வொரு ஜாதியும் தன்னை விருத்திசெய்து கொள்ள வேண்டுமென்ற, முயற்சிக்கு ஆச்சாரியார் கூறும் சமரச போதனை.

'உதவி செய்வதாக இருந்தாலும் நெருங்கினவர்களுக்குத் தானே உதவி செய்ய முடியும்?' என்று கேட்பதின் மூலம், தாம் அதிகார பீடத்திலிருந்து செய்யும் உதவியின் தன்மை, குறிப்பிட்ட அளவையில் எப்படி இருக்கும் என்பதையும், ஆச்சாரியார் ஐயத்திற்கிடமில்லாமல் விளக்கம்தந்திருக்கிறார்.

கனம் ஆச்சாரியாரும் 'சிறந்தவர்கள்' செய்வதுபோலத் தான் செய்வார் — நடந்துகொள்வார்! 'சிறந்தவர்கள் என்று கருதப்படுகிறவர்கள், இந்த ஜாதி விஷயத்தில தவறு செய்து கொண்டு இருப்பதினுல், நாட்டு முன்னேற்றத்துக்குத் தடங்கலாய் இருக்கின்றனர்.'

இவ்வாறு ஆச்சாரியார் கூறுகிறார். 'சிறந்தவர்கள்' 'தவறு' செய்கிறார்கள் என்பதை கனம் ஆச்சாரியார் ஒப்புக் கொள்ளுகிறார். அந்தச் 'சிறந்தவர்கள்' 'நாட்டு முன்னேற்றத்துக்குத் தடங்கலாய் இருக்கின்றனர்!' என்றும் ஆச்சாரியார் துளியும் சந்தேகத்திற்கு இடமில்லாமல் அறிவிக்கிறார்.

இந்த மகத்தான உண்மையைத்தான் திராவிட சமுதாயம், உரிமை பெற அறிவு பெற்ற காலம் முதல் கூறிவருகிறது. ஆச்சாரியார் சுட்டிக் காட்டுவதைத்தான் நாமும் சுட்டிக் காட்டி, கேடுகளையும் பணியில் ஈடுபட்டு இருக்கிறோம்.

நாட்டு முன்னேற்றத்தைக் கெடுக்கிற அளவிற்கு 'சிறந்தவர்கள்' 'செய்யும் செயல்கள்' 'தவறு' என்று ஆச்சாரியார் மறைக்காமல் கூறுகிறார். அவர் கூறும்பொழுது நியாயமானதாகவும், அறநெறி நிரம்பியதாகவும், அதையே நாம் கூறும் பொழுது மட்டும் 'துவேஷம்' நிரம்பியதாகவும், அதர்மமானதாகவும் ஆச்சாரியாருக்கும், அவர் குறிப்பிடும் சில 'சிறந்தவர்க'ளுக்கும்படுகிறது. என்னே விந்தை! என்னே முரண்பாடு! இந்தப் போக்கைத்தான், இந்தக் கண்ணோட்டத்தைத்தான் நாம் சி. ஆர். மலானிசம் என்று குறிப்பிடுகிறோம்!

இந்தோ—சீனுவில் பெரும் போர்

நிலம், கடல், ஆகாய மார்க்கமாக வியட்மின் மீது தாக்குதல்

இந்தோ—சீனுவில் இதுவரை கண்டிராத பெரிய போர் ஆரம்பமாகியுள்ளது. பிரெஞ்சு, வியட்னும் படைகள், நிலம், கடல், ஆகாய மார்க்கமாக வியட்மின் புரட்சிக்காரர்களால் தாக்குதல் நடந்து வருகிறது.

புதிய கல்வித் திட்டம்:

நிதி அமைச்சரின் போதை தெளிகிறது

கும்பகோணம், அக். 16— நகர காங்கிரஸ் கமிட்டி சார்பில் நேற்று மாலை நகர் அரண்மனைத் தோட்டத்தில் தோழர் கே. பி. தங்கவேல் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. சென்னை மாநில நிதி அமைச்சர் சி. சுப்ரமணியம், வெதாரத்தினம் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பாரதமாதாவின் அருள்!

சி. சுப்ரமணியம் பேசுகையில், கூறியதாவது:—

"நல்லவர்கள் இல்லையென்றால், கெட்டவர்கள் மலிந்து விடுகிறார்கள். அப்போது அரசியல் வெறும் சேறுகி விடுகிறது. இதனால் அரசியல் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இதற்கு உதாரணம் ராஜாஜிதான். அவர், பெரிய பெரிய பொறுப்புக்களை யெல்லாம் ஏற்றவர். பாரதமாதாவின் கட்டளைக் கிணங்க மறுபடி மக்கள் சேவையை ஏற்றுக் கொண்டார்.

போதை தெளிகிறது!

புதிய கல்வித் திட்டத்தைக் குறை கூறுகிறவர்களில் அறிஞர்களும், அறிவாளிகளும் கொண்ட ஒரு குழு அமைத்து தங்கள் கருத்துக்களை ஒரு மனு மூலம் என்னிடம் சமர்ப்பிக்கட்டும். அப்படி ஏதாவது அவர்கள் கூறுகிறபடி நியாயமான தவறுகள் தேன்பட்டால் கல்வித் திட்டத்தையே மாற்றி அமைக்கத் தயார்" என்றார்.

இலங்கை புது அமைச்சரவை

ஒருவர் விலகினர்; மற்றொருவர் விலகுவார்

கொழும்பு, அக். 17— தமது மந்திரி சபையில் உள்ளவர்களின் எண்ணிக்கையை குறைக்கப் போவதாக இலங்கையின் புதிய பிரதமர் கொத்தளவாலா இன்று நடவடிக்கை எடுத்தார். நிதி அமைச்சர் லலிதா ராஜ பாக் ஷேயையும், தொழில் மீன்வள மந்திரி பொன்னம்பலத்தையும் ராஜினாமா செய்யுமாறு அவர் கேட்டுக் கொண்டார். அதன்படி ராஜ பாக்சே ராஜினாமா செய்துவிட்டார். பொன்னம்பலம் யோசித்து முடிவு சொல்வதாகக் கூறியுள்ளார்.

தி. மு. கழகத் தோழர்களுக்கு

சென்னை மாவட்ட செயலாளரின் அறிவிப்பு

உறுப்பினர் செயல் கண்டு வருத்தம்

18—10—53ந் தேதிய 'தினத்தந்தி' இதழில், தி. மு. கழகத்தைச் சார்ந்த கே. என். பாண்டியன் படிப்பகச் செயலாளர் எஸ். பி. டி. திராவிடமணி என்பவர் பெயரால், 'நேரு, ஆச்சாரியார் ஆகியோர் படங்களைக் கொளுத்துவோம் பொம்மைகளை உடைப்போம்' என்பதாக அறிக்கை வெளியிடப் பட்டிருக்கிறது. இவரது அறிக்கைக்கும், சென்னை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், கிளைக் கழகங்களுக்கும் யாதொரு சம்மந்தமும் இல்லையாதென்பதை, சென்னை மாவட்டத்திலுள்ள எல்லாக் கிளைக் கழக நிர்வாகிகளுக்கும், பொது மக்களுக்கும் இவ்வறிக்கையின் வாயிலாக, சென்னை மாவட்ட தி மு கழகச் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னையில் நடைபெறும் தி. மு கழக அறப்போர் சம்மந்தமான நிகழ்ச்சிகளுக்கு, சென்னை மாவட்ட கமிட்டி, அல்லது தலைமைக் கழக அறிக்கை மட்டுந்தான் அதிகார பூர்வமானதாகும்.

தனிப்பட்டவர்கள் இதுபோல் திட்டம் தருவதோ, அறிக்கை வெளியிடுவதோ, தி. மு. கழக சட்ட திட்டங்களுக்கும், கழகக் கட்டுப்பாட்டுக்கும் உகந்ததல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன் என்று சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

"சிபாரிசுக்குப் பணிந்தது மத்திய சட்டசபை"

பெண்கள் மாநாட்டில் சாரளாதேவி

லட்சுமணபுரி, அக். 15—

இந்திய மாதர் தேசிய கவுன்சில் கூட்டம் இன்று இலக்குமனபுரியில் துவங்கியது. உத்தரப் பிரதேச கவர்னர் கே. எம் முன்ஷி மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

அவர் தன்னுடைய தலைமை உரையில் சமூக பண்பாட்டையும், தார்மீக பலத்தையும் ஒன்று படுத்துவதன் மூலம்தான் குடும்பப் பண்பாடு உயரும். எதிர்ப் பிரசாரங்களை ஒழிக்க வேண்டுமென்றார்.

தலைமை வகிக்க இருந்த சாரளாதேவி வர இயலாத காரணத்தால் அவருடைய தலைமை உரையை ஷோம் படித்தார்.

அதில், "இந்து தொகுப்பு சட்ட மசோதா பார்லிமெண்டில் முழுதும் நிறைவேறாது போனது வருந்தத்தக்கதே. மசோதாவின் முக்கிய சட்டங்களை நிறைவேற்றிவைக்கவில்லை. உபயோகமற்ற சில சட்டங்களை நிறைவேற்றியுள்ளனர். இது போல செய்ய நேர்ந்தது சிபாரிசு தூண்டுதலினாலேயே. இனிமேற்கொண்டாவது சர்க்கார் இந்து தொகுப்பு சட்ட மசோதாவை நிறைவேற்றி பெண்ணினத்திற்கு நன்மை செய்யவேண்டும்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

பெண் அமைச்சரின் 'அதிருஷ்டம்!'

சென்னை, அக். 19—

ஆந்திர மகிள சபாவின் ஆதரவில் கொண்டாடப்படும் நவராத்திரி விழாவையும், பொருட்காட்சியையும் சென்னை மாநில மதுவிலக்கு, பெண்கள் நல அபிவிருத்தி அமைச்சர் திருமதி ஜோதி வெங்கடாசலம் ஆரம்பித்து வைத்தார். பொருட்காட்சியில் மாணவிகள் நடத்தும் போட்டியில் கலந்து கொண்டு ஒரு நாய்க்குட்டி பரிசு பெற்றார்.

"வந்தோருக்கெல்லாம் வாழ்வளித்தவர்கள் தமிழர்கள்"

பம்பாய் தமிழ் இலக்கிய மாநாட்டில் திரு. பிள்ளை

பம்பாய், அக். 16—

நான்காவது தமிழ் இலக்கிய மாநாட்டை பம்பாய் காங்கிரஸ் தலைவர் எஸ். கே. பட்டீல் அவக்கிவைத்தார். தமிழ்மொழியின் சிறப்பைப் பற்றி திரு. பிள்ளை பேசுகையில், "சகிப்புத் தன்மையை முதன் முதலில் போதித்தவன் தமிழன். யாவருக்கும் இடமளித்தவன் தமிழன். தமிழர்கள் ஒரு காலத்தில் மெக்சிகோ வரை பரவியிருந்தனர். கவுரவமாக வாழ்ந்தார்கள்" என்றார்.

லண்டன் துறைமுகம் மீது அணுகுண்டு வீச்சு?

லண்டன், அக். 18—

உலகத்திலேயே மிகப் பெரியதான லண்டன் துறைமுகம் மீது அணுகுண்டு வீசப்பட்டால் எவ்வளவு சேதம் ஏற்படும் என்று கண்டறிய ஒரு ஒத்திகை நடைபெற்றது. இந்த ஒத்திகைக்குத் திட்டம் போட ஆறு மாதங்கள் பிடித்தன.

சுமார் 700 அடி உயரத்தில் 20,000 டன் அணுகுண்டு வெடித்தால் அரை மைல் வட்டாரத்திற்கு எல்லாம் தரை மட்டமாகி விடும்; இரண்டு மைல்கள் வட்டாரத்திற்கு கணிசமான சேதம் ஏற்படும் என்று நிபுணர்கள் கூறியுள்ளனர்.

சென்னை காங்கிரசைக் காப்பி அடிக்கிறது பஞ்சாபும்!

தாராசிங் டில்லி யாத்திரைக்கு எதிராக காங்கிரஸ் யாத்திரை!

லூதியானா, அக். 17—

பஞ்சாப் அகாலிடால் தலைவரான மாஸ்டர் தாராசிங், இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் மாளிகை முன், உண்ணாவிரதம் மேற்கொள்ள டெல்லி நோக்கி யாத்திரை செய்கிறார். இந்த நடவடிக்கையை எப்படித் தடுப்பது என்பது குறித்து, டெல்லி கமிஷனர் ஆலோசித்துக் கொண்டிருப்பதாகச் செய்தி ஒன்று ஏற்கெனவே வெளிவந்திருக்கிறது.

இப்பொழுது மற்றொரு விசித்திர செய்தி வெளிவந்திருக்கிறது அதாவது, இருபது அரிஜனங்கள், ஆரிசிங் அர்ஜுன்சிங் என்பவர் தலைமையில் டில்லிக்கு வந்து, தாராசிங்கின் உண்ணாவிரதத்தை முறியடிக்க, தாங்களும் உண்ணாவிரதமிருக்கப்போவதாக அறிவித்திருக்கிறார்கள். அவர்கள் தாராசிங்கின் போக்கு, வெறும் தேர்தலில் வாக்குகளைப் பெறும் தந்திரம் என்று கூறுகிறார்கள்.

மாற்றுக் கட்சியினர் நடவடிக்கையைக் கெடுத்து கலகம் செய்வதற்காக சென்னை காங்கிரஸ் கட்சியினரில் சிலர் மேற்கொண்டுள்ள நடவடிக்கையைப் போலவே பஞ்சாப் காங்கிரஸ் கட்சியினர் போக்கும் அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கது.

பாகிஸ்தான் லீக் தலைவராக முகமத் அலி தேர்வு

முகமத் அலிக்கு 258; இசாகானுக்கு 36 வாக்குகள்!

பாகிஸ்தான் பிரதம மந்திரி முகமத் அலி, பெரும்பாலான வாக்குகள் பெற்று முஸ்லிம் லீகின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவரை எதிர்த்து நின்ற பலுசிஸ்தான் முகமத் இசாகான் 36 வாக்குகளே பெற்றார்.

கான் போட்டியிட்டதற்குக் காரணமே, 'பிரதம மந்திரி பதவியும், ஆளும் அரசியல் கட்சியான முஸ்லிம் லீகின் தலைமைப் பதவியும் ஒருவரிடமே இருக்கக் கூடாது' என்ற பிரச்னையை வலியுறுத்துவதற்கேயாகும்.

பாகிஸ்தான் பிரதேசத்தில் உள்ள எல்லா மாநிலப் பிரதமர்களும், அலிக்கு வாக்களித்தனர். பஞ்சாப் பிரதமர் பெரோஸ்கான் நூன் தான் அலி பெயரை முன்மொழிந்தார்.

தேர்தலில் குழப்பமும் கணிசமாக இருந்தது. கூட்டத்தைப் போலீஸ் கண்காணிக்க வேண்டிய அவசியமும் உண்டாயிற்று.

தைமூர், கோரி, கஜினிக்கு 'ஜயஜய'.

(1ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மீர் பிஜா பரீஷத் இயக்கம்—பாராளுமன்றத்தில் எதிர்க் கட்சியினர் எழுப்பும் வாதம் எல்லாவற்றிற்கும், நேரு, 'நான்சென்ஸ்,' 'நான்சென்ஸ்' எனப் புதிய பொருள் கொடுத்தார்!

'எண்ணியதுபோல் எதையும் பேசுவது நகாது.' என்று காலஞ்சென்ற முகர்ஜி தெரிவித்தும். நேரு, செவி சாய்க்கும் நிலையினராயில்லை! இருந்தாற்போலிருந்து ஒரு நாள், தென்னிந்திய திராவிட இயக்கத்தினர் 'முட்டாள்கள்' என நேரு முழக்கமிட்டார்! அத்தகு 'முட்டாள்கள்' காட்டிய எதிர்ப்பின் முழுவடிவமே சென்னை தெருக்களில் அணிவகுத்து அலைபாய்ந்த கருப்புக் கொடிகள்!

நேரு ஒரு அதிகப்பிரசங்கி என்று குறிப்பிட்டால், 'மகானைப் பழிப்பதா?' என சிலர் பதறுவர்; ஆனால், ஜனநாயகத்தின் வெளிச்சத்தில், எந்த மகானும், நிற்க வேண்டிய இடத்திலேயே நிற்க வேண்டும்.

'வாய்க்கு வந்ததெல்லாம் பாட்டுக்குப் பாட்டு,' என்பது போல, நேருவாயிற்றே என்று, எதையும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பதில்லை. பிரதமரின் பதவியும், அதிகாரமும், எத்தனை அநாகரீகமாக வடிவெடுத்துள்ளது என்பதை அவரது சென்னை சொற்பொழிவு ஒன்றே போதும், விளக்க!

• • •

சென்னையில் நேரு பேசினார்:—

"இங்கு ஒரு ரகக் காட்டுமிராண்டிகள் உள்ளதை நான் அறிவேன். திராவிடர் இயக்கத்தினர்—விளக்கமாக தெரியாது—கேள்விப் பட்டேன்—மனித வரலாற்றில் விருப்புடையவனாதலால், இவர்களைப் பற்றியும் அறிந்திருக்கிறேன். ரயிலை நிறுத்துவது 'நான்சென்ஸ்' என நான் குறிப்பிட்டேன். அவர்கள் அதை விரும்பவில்லை. குன்யத்தோடு வியாதிக்க முடியாதல்லவா? ஆனால், இவைகளை, இனி அனுமதிக்கப்போவதில்லை. இவர்கள் எந்த 'நான்சென்சும்' பேசிக்கொள்ளட்டும்; ஆனால் 'நான்சென்ஸ்' செயலைத் தொடர்ந்தால், அந்த முட்டாள்தனம், அந்த மடமை, அந்த அபத்தம் இங்கே அனுமதிக்கப்படப் போவதில்லை. காட்டுமிராண்டிகளைப் பற்றி நான் குறிப்பிட்டேன்; அவர்கள் இந்தக் கூட்டத்தினரை விட நல்லவர்கள். சென்னை வாழும் இந்த 'இழிந்த மக்களை' அவர்களோடு ஒப்பிடக் கூடாது."

நேருவின் அகங்காரம் மீண்டும் ஆர்ப்பரிக்கிறது—மடையர்கள், முட்டாள்கள், காட்டுமிராண்டிகள், இழிமக்கள் இப்படி நீளுகிறது நேரு பண்டிதரின் அமர கீதம்!

திராவிட இயக்கத்தினர் செய்த பிழை என்ன? குஜராத்தி—மார்வாடி ஆதிக்கத்தை, அதன் பாதந் தாங்கும் ஏகாதிபத்தியத்தை அவர்கள் எதிர்க்கின்றனர்; எதிர்ப்பைக் காட்ட இயக்கங்கள் நிகழ்த்துகின்றனர். இவைகளை, காட்டுமிராண்டிப் பண்பு, இழிந்த தன்மை எனப் பேச, மோதிலால் நேருவின் மைந்தனார் அத்தனை பெரிய மனிதரோ? இல்லையென்பது உறுதி. எதிரான கருத்துக்களை மனதிற்கொள்ள, பொறுமையற்ற ஜனநாயக விரோதி, தான் என்பதை நேரு காட்டிக்கொண்டார். இதைத் தவிர, இந்த அட்டகாசங்களுக்கும், ஆட்டதுள்ளலுக்கும் விரிவான வேறு பொருளில்லை!

தங்களது எதிரிகளைப் பற்றி சர்ச்சிலோ, அட்லியோ இப்படிப் போதையின்றி பேசியிருந்தால், பிரிட்டிஷ் மக்கள், அவர்களைப் பிடித்து காட்சிசாலையில் அடைத்து விடுவார்கள்!

பண்டிதர்களின், சாஸ்திரிகளின், ஆச்சாரியார்களின் இந்தியாவில், வீர ஆராதனைக்கான திரை இன்னும் கிழியவேண்டியுள்ளது. சென்னையில், நேரு கண்ட எதிர்ப்பு, அந்தத் திரையைக் கிழிக்க முதல் பிரயோகம் என்பதை உணர்தல் நலம்.

[மேலே பிரசுரமாகியிருக்கும் இந்தக் கட்டுரை, தோழர் டி. விவேகானந்தரை ஆசிரியராகக் கொண்டு, கோவையிலிருந்து வெளிவரும் "சோஷலிஸ்ட்" (அக். 12) வார இதழில் வெளிவந்தவை. இதை மொழிபெயர்த்து அனுப்பியவர் தோழர் இரா. இளஞ்சேரன் அவர்கள். அவருக்கு நம் நன்றி—ஆசிரியர்]

திரு. வி. க. இரங்கற் கூட்டம்

14-10-53ல், வசூர் வாரன் மைக் கழக ஆதரவில் (வேலூர் வட்டம்) வல்லம் மகா வித்துவான் வைத்தியலிங்கம் அவர்கள் தலைமையில் இரங்கற் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் கா. மு. சுந்தர உடையார், சதாசிவ முதலியார், பெருமாள், திருவேங்கடம், கிருட்டினன், பொ. வல்லாளன், ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

தென்கரை தி. மு. கழக நிர்வாகிகள் தேர்தல்

8—10—53-ல், தோழர் கு. பொ. கோதண்டராயன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—நா. ராமகிருட்டினன், செயலாளர்; மா. கதுவைப்பன், துணைச் செயலாளர்; செ. பெரமானி, பொருளாளர். செயற்குழு உறுப்பினர்கள்: நா. ராமகிருட்டினன், மா. கதுவைப்பன், செ. பெரமானி, ரா. ராமப்பன், கோ. ராமசாமி, கோ. செங்கராஜு, சி. பசுபதி, வெ. செருபதி, கு. ஜெகனுதன், மா. முத்தையன், பா. ராமகிருட்டினன் ஆகியோர்.

கூட்டத்தில் பேசப்பட வேண்டியது ஆங்கில மொழியா, உருது மொழியா என்ற சிக்கலுக்கும் பஞ்சமில்லை. வங்காள மொழி இந்த மொழிப் பிரச்னையில் தலையிடவில்லை. ஆங்கிலமும், உருதும் உறுப்பினர்களால் பேசப்பட்டன.

உயர்நிலைப் பள்ளி மானியத்தை ஒழிக்க பம்பாய் சர்க்கார் முடிவு

காங்கிரஸ் சர்க்கார் கல்விக்குச் செய்யும் சிறந்த சேவை!

ஆமதாபாத், அக். 18—

தனி நபர்களாலும், சங்கங்களாலும் நடத்தப்பட்டு வரும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு இன்று முதல் மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு பண உதவி எதுவும் செய்யாது என்று பம்பாய் சர்க்கார் கல்வி மந்திரி தினகாராவ் தேசாய் நேற்று குறிப்பிட்டார்.

தனி நிர்வாகத்தில் உள்ள மேற்படி உயர்நிலைப் பள்ளிகளை பொதுநிலைப் பள்ளிகளாக, அந்த நிர்வாகிகள் மாற்ற முயற்சிக்க வேண்டும் அல்லது சர்க்கார் உதவியை எதிர்பாராமலே முழுதும் சொந்தச் செலவில் பள்ளிகளை நிர்வகித்துக்கொள்ள, இந்த இடைக் காலத்தில் தயாராக வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார். உயர்நிலைப் பள்ளியில் காணப்படும் சில குறைபாடுகளைக் களைவதற்கே இந்த மானிய ஒழிப்பு வேலை என்று அவர் எடுத்துக் காட்டினார்.

தூத்துக்குடி வழக்கு நிதி

✶

முன் தொடர்ச்சி வசூல் ரூ.	721-14—4
கரிபன்காடு செ. செல்லக்கண்ணு	2—0—0
மதுரை எம். எஸ். முத்தையா	4—0—0
கோவை ஒக்கிலியர்காலனி தையற்கார தோழர் நடராசன் மூலம்	4—8—0
தல்லிபார் பி.எம். செல்வராஜ்	1—4—0
காரைக்கால் செ. ஞானசம்பந்தன்	2—0—0
பம்பாயிலுள்ள தூத்துக்குடி தோழர் ஜே. தேவதாஸ்	1—0—0
கும்மிடிபூண்டி தி. மு. கழகம்	1—0—0
திருமழிசை தி. மு. கழகத் தோழர்கள்—செயலாளர் டி. கே. பெருமாள் மூலம்	15—0—0
சத்தாப்பூர் ஏ. அ. சுப்பு	2—2—0
தஞ்சை சாமி—தேவராஜி மூலம்	4-10—0
தாராவி (பம்பாய்-17) தி. மு. கழகத் தோழர்கள்—செயலாளர் நெல்லைச் செழியன் மூலம்	50-0—0
சிவகாசி பி. எஸ். சங்கரலிங்கம்	6—0—0
தூத்துக்குடி எஸ். பி. முகைதீன்	1—0—0
,, டி. சுயம்பு	1—0—0
,, எம். ராஜசிகாமணி	1—0—0
,, ப. காசி	1—0—0
,, ஏ. பாலையா	1—0—0
,, எம். ஆதிநாராயணன்	1—0—0
,, ஜி. அமலபுஷ்பம்	1—0—0
,, ஆர். தங்கமணி	1—0—0
,, எம். வேலாயுதம்	1—0—0
,, கி. காசி	1—0—0
,, பி. அருணாசலம்	1—0—0
,, எ. பிச்சை	1—0—0
,, பி. சிதம்பரம்	5—0—0
,, ப. பா முத்துமாரி நாடார்	2—0—0
,, பி. ஏ. பி. நடராச நாடார்	1—0—0
,, கெ. கருப்பசாமி	1—0—0
,, எம். ராசபாண்டி	1—0—0
,, வெ. அப்பாதுரை	1—0—0
,, கு. தாயுமானசாமி	1—0—0
,, பி. குருசாமி நாடார்	1—0—0
,, அகிலாண்டேஸ்வரி காபி கிளப்	1—0—0
விழுப்புரம் த. பழனி	1—0—0
,, அ. சுப்ரமணியம்	1—0—0
,, ச. வெங்கடேசன்	1—0—0
,, ரங்கநாதன்	1—0—0
,, ஐயப்பன்	1—0—0
,, காத்தவராயன், நடேசன், அந்தோணி முதலியோர்	1—8—0
,, எஸ். டி மாரியப்ப பாண்டியன்	2—8—0
,, எஸ். ராதாகிருஷ்ணன்	2—8—0
,, ஆர். துரைசாமி	2—8—0
சென்னை சேப்பாக்கம் தோழர் பி. எம் அனீபா மூலம்	5—4—0
சென்னை-1 மறுமலர்ச்சி மன்றம், பாரிஷ் வெங்கடாசல ஐயர் தெரு	5—0—0
சென்னை சேத்துப்பட்டு வி என். வேணுகோபால்	5—8—0
சென்னை நகரசபை குமாஸ்தாக்கள்—தோழர் டி. எஸ். ஜானகிராமன் மூலம்	10—0—0
சென்னை 11-வது வட்டம் கே. வி. ராதாகிருஷ்ணன்	4—0—0
,, எஸ். எஸ். துரைசாமி	1—0—0
,, ராமலிங்கம்	2—0—0
,, என். ஆர். ஜி. சாமி	1—8—0
,, குருசாமி	1—0—0
,, ராவணன்	1—0—0
சென்னை மயிலை பி. கருணாநிதி	1—0—0
,, பி. லோகநாயகி	1—0—0
சென்னை புரசை எஸ் வி. பெருமாள்	1—0—0
,, எஸ். டி. நடராசன்	1—0—0
,, எஸ். நமசிவாயம்	1—0—0
,, வி. ஜகநாயகலு	1—0—0
,, எம். முருகேசன்	1—0—0
சென்னை 30-வது வட்ட எஸ். கோதண்டபாணி	2—0—0
,, ,, பழனி	1—0—0
,, ,, வி. கே. மோகன்	1—0—0
,, ,, ஆ. சுப்பையா	1—0—0
,, ,, வி. கே. பொன்னுசாமி	1—0—0
,, ,, எம். தங்கவேல்	1—0—0
,, ,, வி. கே. சங்கரலிங்கம்	1—0—0
,, ,, சண்முகம்	1—0—0
,, ,, டி. பொன்னம்பலம்—வி. கே. ராஜா	1—0—0
சுசீந்திரம் தெக்கனூர் வி. எஸ். மணி	5—0—0
திருமலாபுரம் எ. பொன்னுசாமி	3—0—0
,, எ. எம். பெரியசாமி	1—0—0
,, டி. எஸ். சவுந்தரபாண்டியன்	1—0—0
,, ரா. குருசாமி	2—0—0
,, எஸ். வீரபத்திரன்	1—0—0
,, கே. பாண்டியராஜ்	1—0—0
,, எம். என். ரத்தினம்	1—0—0
,, வி. குருசாமி	1—0—0
,, எம். கே. மாரிமுத்து	1—8—0
,, எஸ். எஸ். குருசாமி	1—0—0
,, எஸ். கே. சவுந்தரராஜ்	3—0—0
,, டி. சீனியப்ப நாடார்	3—0—0
,, செ. தி. கருப்பணன்	1—0—0
,, பி. ரத்தினம்	1—0—0
,, எஸ். சிதம்பரம் (மதுரை)	1—0—0
,, எஸ் வி. குருசாமி	1—0—0
,, எஸ். டி. குருசாமி	1—0—0
,, எஸ். சீனியப்பன்	1—0—0
,, ஏ. மாரிமுத்து	1—0—0

(இதன் தொடர்ச்சி அடுத்த பத்தியில் பார்க்கவும்)

"ஆசிரியர் தரம் உயர வேண்டும்; மத்தியபீடம் அதற்கான பொருளுதவி செய்ய வேண்டும்"

டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் வற்புறுத்தல்

சென்னை, அக். 18—செகண்டரி கல்வி கமிஷன் சேர்மன் டாக்டர் ஏ லட்சுமணசாமி முதலியார், நேற்று காலை ஆசிரியர் மாநாட்டில் பேசுகையில், "ஆசிரியர் நிலைமையையே அடிப்படையாகக் கொண்டு, கமிஷன் சிபாரிசுகள் செய்துள்ளது," என்று குறிப்பிட்டார்.

"ஆசிரியர்களின் சம்பளங்கள் கவனிக்கப்படவேண்டும்; அவர்களுடைய தொழிலில் அவர்களுக்குள்ள ஆர்வத்தைக் குறையாத வகையில் பார்த்துக் கொள்ள வேண்டும்; இந்தச் சிபாரிசுகளை அமல் நடத்த போதனை பயிற்சித் திட்டத்திற்கு முக்கியத்துவம் வழங்கவேண்டும்," என்றும் அவர் கூறினார்.

மேலும் அவர் பேசுகையில், "தொழில் நுட்பக் கல்விக்காக அதிகப் பள்ளிக் கூடங்கள் திறக்கப்பட வேண்டும். அப்பொழுது தான் மாணவர்களுக்கு தாழ்வு மனப்பான்மை ஏற்படாதிருக்கும்" என்றார்.

தற்போது, மாகாணங்களிலும், மத்திய சர்க்காரிலும் கல்வி சம்பந்தமானவைகளை ஆறு மந்திரிகள் கவனித்து வருகிறார்கள்; ஆனால், ஒருவர் செய்வது மற்றவர்களுக்குத் தெரிவதில்லை. ஆகவே, ஒருவருக்கொருவர் தொடர்பு கொண்டு ஆக்கவேலைகளில் ஈடுபடவேண்டும். அரசியல் சட்டத்தில் காணப்படும் ஷரத்தைப் பின்பற்றி, மத்தியபீடம், செகண்டரி கல்விக்கு அதிக உதவியளிக்க வேண்டும். அவ்வித உதவியின்றேல், கல்வித் திட்டம் உருப்படியாகாது. போதிய பயிற்சி இல்லாததால், வெளி நாட்டிலிருந்து வரவழைக்கப்பட்டுள்ள விஞ்ஞான சாதனங்கள் பாழாகின்றன," என்றும் அவர் சொன்னார். மற்றும் பலர் பேசினர்.

7-கோடி பவுன் சேதம்

ஏதென்ஸ், அக். 15—சமீபத்தில் பூகம்பம் ஏற்பட்டிராவிட்டால், கிரீஸ் சுபீட்ச நிலையை அடைந்திருக்கும்; ஆனால், பூகம்பத்தினால் ஏழு கோடி பவுன் சேதம் ஏற்பட்டிருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. முடிவான புள்ளி விவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை. இதில் வீடுகளுக்கும், பொதுக் கட்டிடங்களுக்கும் ஏற்பட்ட சேதம் 2 கோடி பவுன் என்று மதிப்பிடப்படுகிறது.

(முன் பத்தியின் தொடர்ச்சி)

,, டி. எஸ். சாமிமுத்து	2—0—0
,, பி. தருமர்	1—0—0
,, ஜி. தங்கராஜ்	2—0—0
,, அ. அ. சுப்பையா	1—0—0
,, கே. காசியப்பன்	1—0—0
,, சு. அ. தி. சுப்ரமணியன்	1—0—0
,, என். சருவிமணி	5—0—0
,, ராமையா, செல்லையா, அருணகிரி, சுந்தரப்பன், கடற்கரை, வீரபாண்டின், குப்பழகிரி, ரத்தினம் ஆகியோர்	4—0—0
புதுக்கோட்டை தி. மு. கழகப் பொதுக்கூட்ட உண்டி வசூல்	8—8—0
காட்டுமன்னார்கோயில் எஸ். சொக்கலிங்கம்	1—0—0
பறங்கிப்பேட்டை ஏ. பாவாடை	2—0—0
,, எம். எம். முஸ்தபா	2—0—0
,, இரா. ஆறுமுகம்	1—0—0
,, சொ. சதாசிவம்	1—0—0
,, த. சம்பந்தமூர்த்தி	1—0—0
,, ரங்கநாதன், தண்டபாணி, ரசூல்கான்	1—8—0
புதுப்பட்டு வி. ரங்கநாதன்	1—0—0
அருங்குணம் எஸ். குப்பன்	1—0—0
,, ஏ. அங்கு	1—0—0
மல்லாண்டி டி பெருமாள்	1—0—0
,, ஜே. ஜெயராமன்	1—0—0
,, ஜே நாதமுனி	1—0—0
தென்மலை எம். எம். சாமி	1—0—0
திண்டுக்கல் தோழர் கரிகாலன் மூலம்	25—0—0
ஏ. கொண்டாலம்பட்டி தி. மு. கழகம்	5—0—0
விருதுநகர் வா. அ. சங்கரபாண்டியன்	5—0—0
,, பி. சங்கரலிங்கம்	5—0—0
,, மு. சி. சு. நாராயணசாமி	5—0—0
,, வ. பெ. வடிவேல்	5—0—0
,, பே. சி. சி. பேரன் செல்வராசன்	5—0—0
,, தியாகராசன்	2—0—0
வாலாஜாபாத் தி. மு. கழகம் பொதுக்கூட்ட உண்டியல் வசூல்—எஸ்.எஸ். ராஜேந்திரன் மூலம்	11—0—0
சூலூர் ஆர். எஸ். மணியம், எஸ் ஆர். சுப்ரமணியம், என். ஏ. நாச்சிமுத்து, எஸ். ஆர், நாராயணசாமி, எஸ். பி. வீரப்பன், எஸ். என் சின்னையான், எஸ். என். நடராசன் ஆகியோரால் அனுப்பப்பட்டது	15—0—0
திருச்சி ஜி. அன்புமணி	1—0—0
தோழியர் பூங்கோதை மூலம்—விளாம்பட்டி தி மு. கழகம்	3—0—0
சிவகிரி காமாட்சி	1—0—0
தாத்தையங்கார் பேட்டை தோழர்கள்	3—0—0
	1073—2—4
குறிப்பு: 10-ந் தேதி இதழில் வெளியிடப்பட்ட கணக்கில், தோழியர் பூங்கோதை மூலம் வரவு வந்தவைகளில், சிவகாசிக் கழகம் கொடுத்தது 20 ரூபாய் என்றிருப்பதை, 15—10—0 என்று திருத்தி வாசித்துக் கொள்ள வேண்டுகிறோம். மேற்படி அதிகப்படியாக வரவு வைக்கப்பட்டு விட்ட தொகையில், சிவகிரி காமாட்சி, தாத்தையங்கார்பேட்டை தோழர்கள் ஆகியோர்கள் போல் மேற்கண்டபடி வரவு வைத்துக்கொண்ட தொகை	4—6—0
ஆக மொத்தம் ரூ.	1068—12—4

நெல்லை மாவட்ட கிளைக் கழக தோழர்கட்கு

தூத்துக்குடி தோழர் எம். ரத்தினம் அவர்களை, டாக்டர், பொதுக் கூட்டங்களில் பேசக் கூடாதெனக் கூறியிருப்பதால், அவரைக் கேட்காமல், யாரும் விளம்பரம் செய்யக் கூடாதெனவும், இப்போதைக்கு எங்கும் பொதுக்கூட்டங்களில் பேச இயலாதெனவும் அவர் தெரிவித்துக்கொள்கிறார்.

புதிய கல்வித் திட்டக் கண்டனம்

அம்மையப்பன், அக். 18—13—10—53 ல் இவ்வூர் பள்ளியில் நடைபெற்ற பெற்றோர் சங்கக் கூட்டத்தில், புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் பிற்பட்ட ஏழை மாணவர்களை பாதிப்பதாக இருப்பதால், வன்மையாகக் கண்டிப்பதுடன், உடனடியாக அத்திட்டத்தைக் கைவிடுமாறு அரசியலாரை வற்புறுத்துகிறது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருமணம்

குமாரம் தோழர் கே. வி. கருப்பையா அவர்களின் திருமண விழாவின் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 நன்கொடை கிடைக்கப் பெற்றோம்.—நன்றியுடையது—பொறுப்பாளர்.

பிறப்பு

தோழியர் காமாட்சி செல்வராசனுக்கு 12—10—53-ல், ஓர் ஆண் மகவு பிறந்தது குறித்து, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது. வரப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

இராசிபுரம் தி. மு. கழக நிர்வாகிகள் தேர்தல்

இராசிபுரம் 2-வது வார்டு தி. மு. கழகக் கிளை அமைப்புக் கூட்டம் 11—10—53-ல், தோழர் வி. சுந்திரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமயம் தோழர்கள் வ. ரங்கசாமி செயலாளராகவும், ந. ராமதாஸ் துணைச் செயலாளராகவும், வ. குப்புசாமி பொருளாளராகவும், கா. சுந்தர்ராஜ், எம். ஏ. பாரி, டி. எஸ். மணி, கி. ராஜகோபாலன், க. வேலாயுதம், அ. நீலகிருஷ்ணன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்

திராவிட முன்னேற்ற கிராமப் பிரசார கழகம்

மேலூர், (தூத்துக்குடி,) அக். 19—11—10—53ல், மேலூர் (வட்டத் தெப்பக்குளம்) உச்சிமாகாளி மைதானத்தில் திராவிட முன்னேற்ற கிராம பிரசாரக் கழகத் துவக்கவிழா தோழர் தி.வயணப்பெருமாள் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. வெ. அருணாசலம் கழகத்தின் அவசியம் பற்றி விளக்கவுரையாற்றினார். பின்னர், பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் தென் இந்திய ஆதி திராவிட மகாஜன சங்கம்

12—10—53ல், மேற்படி சங்க நிர்வாகக் கழகக் கூட்டம், அலுவலகத்தில் நடைபெற்றது. தோழர் ஒ. த. அய்யாசாமி தலைமை வகித்தார். வரவு-செலவு கணக்குகள், நிர்வாக சம்பந்தமான அலுவல்கள் கவனிக்கப்பட்ட பின்னர், பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, ஜூலிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம்.ஏ.